Hilchot Shabbat of Rabbi Moses ben Maimon in English and Tamil.

நூல் : மிஷ்னே தோரா

ஆசிரியர் : (இரம்பம்)

தொகுப்பு பாகம் : செ்ஃபர் சிமாணிம்

முதன்மை அறிவுறுத்தல் : சபாத்

In the name of the Lord, the God of the world.

I inherited Your testimonies forever, for they are the joy of my heart.

இப்பிரபஞ்சத்தின் தலைவரான இறைவனின் திரு பெயரால்,

இறைவா! உமது கட்டளைகளை என்றென்றும் சுதந்தரித்துக்கொண்டேன், அவைகளே என் இதயத்தின் மகிழ்ச்சி!! (தெஹிள்ளீம் 119:11)

The third book which is The Book of Times

It contains ten sets of Halachot and this is their order:

- The Laws of the Shabbat
- The Laws of Eruvin
- The Laws of Shevitat Asor
- The Laws of Shevitat Yom Tov
- The Laws of Chametz U'Matzah
- The Laws of Shofar, Sukkah, vLulav
- The Laws of Shekalim
- The Laws of Kiddush HaChodesh
- The Laws of Ta'aniyot
- The Laws of Megillah vChanukah

மூன்றாவது தொகுப்பு "காலங்கள் தோறும் கடை பிடிக்க வேண்டிய கட்டளைகளை" குறித்து கற்று தரும் நூல் தொகுப்பாகும்

இது பத்து வகையான ஹலோஹாத்துகளை கொண்டுள்ளது,

அவைகளின் வரிசை:

- சபாத்தின் சட்டங்கள் (ஓய்வுநாளின் சட்டங்கள்)
- எருவிம் சட்டங்கள் (பளு தூக்கும் சட்டங்கள்)
- ஷெவிடட் அசோரின் சட்டங்கள் (இனத்திலிருந்து தள்ளிவைத்தல் சட்டங்கள்)
- ஷெவிடட் யோம் டோவின் சட்டங்கள் (பாவ அறிக்கை நாள் சட்டங்கள்)
- சாமெட்ஸ் உ'மட்சாவின் சட்டங்கள் (புளித்த/புளிக்காத உணவை குறித்த சட்டங்கள்)
- ஷோ:ஃபர், சுக்கா, விலுலாவ் சட்டங்கள் (ஆட்டு கெடா கொம்பை ஊதுதல், கூடார பண்டிகை கொண்டாடுதல், கொண்டாட்ட பழங்கள் அலங்கார தோரணைகளை குறித்த சட்டங்கள்)
- ஷெகாலிமின் சட்டங்கள் (பாவ நிவாரண பண காணிக்கை குறித்த சட்டங்கள்)
- கிடுஷ் ஹாகோதேஷ் சட்டங்கள் (பண்டிகை நாளில் வரும் ஓய்வு நாளை வாழ்த்தும் சட்டங்கள்)
- தானியோட்டின் சட்டங்கள் (நோன்பு நாளின் சட்டங்கள்)
- மெகில்லா விசானுகாவின் சட்டங்கள் (ஹனுக்கா பண்டிகை சட்டங்கள்)

Introduction to Hilchos Shabbos

They contain five mitzvot: two positive commandments and three negative commandments:

- 1) To rest on the seventh day;
- 2) Not to perform work on this day;
- 3) [For the court] not to administer punishment on the Sabbath;
- 4) Not to proceed beyond the limits [established by the Torah] on the Sabbath;
- 5) To sanctify the day by taking note [of it].
- These mitzvot are explained in the chapters [which follow].

ஹில்கோஸ் ஷபோஸ் (திரு ஓய்வுநாள்) அறிமுகம்

திரு ஓய்வுநாளை குறித்து ஐந்து மிட்ஸ்வொத்துகள் (கட்டளைகள்) தோராவில் உள்ளன:

அவை “செய்ய வேண்டிய" இரண்டு கட்டளைகள் மற்றும் "செய்யக்கூடாத" மூன்று கட்டளைகள்:

1) ஏழாவது நாளில் ஓய்வெடுக்க;

2) இந்த நாளில் வேலை செய்யக்கூடாது;

3) ஓய்வுநாளில் தண்டனை வழங்கக்கூடாது;

4) ஓய்வுநாளில், தோராவால் நிறுவப்பட்ட தூரத்தை தாண்டி அப்பால் ஒருவர் பயணம் செல்லக்கூடாது;

5) ஓய்வு நாளை முன் கூட்டியே திருநாளாக குறிப்பதன் மூலம் அந்த நாளை புனிதமாக்குதல்.

Chapter 1

Halacha 1

Resting from labor on the seventh day fulfills a positive commandment, as [Exodus 23:12] states, "And you shall rest on the seventh day." Anyone who performs a labor on this day negates the observance of a positive commandment and also transgresses a negative commandment, for [*ibid.* 20:10] states, "Do not perform any labor [on it]."

What are the liabilities incurred by a person who performs labor [on this day]? If he does so willingly, as a conscious act of defiance, he is liable for *karet*; if witnesses who administer a warning are present, he should be stoned [to death]. If he performs [labor] without being conscious of the transgression, he is liable to bring a sin offering of a fixed nature.

அத்தியாயம் 1

இந்த மிட்ஸ்வொத்துகள் (கட்டளைகள்) பின்வரும் அத்தியாயங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது

ஏழாவது நாளான ஓய்வு நாளில் நம் அன்றாட பணிகளிலிருந்தெல்லாம் ஓய்வெடுக்க நம்மிடும் ஷெமொத் 23:12 திருவார்த்தை கூறுகிறது. இது ஒரு 'செய்யவேண்டிய' கட்டளையாகும்

"நீங்கள் ஏழாம் நாளில் ஓய்வெடுக்க வேண்டும்"

இந்த நாளில் செய்யக்கூடாத வேலைகளை செய்யும் எவரும் தோரா போதித்த "செய்யவேண்டிய கட்டளையை" மீறுகிறார், மேலும் தோரா போதித்த 'செய்யக்கூடாத கட்டளையையும்' மீறுகிறார் என்று தோரா இறை வார்த்தை திட்டவட்டமாக கூறுகிறது,

வாசிக்க ஷெமொத் 20:10 "[அதில்] எந்த வேலையும் செய்யாதீர்கள்."

இந்த நாளில் உழைப்பைச் செய்யும் ஒருவருக்கு விழும் தண்டனைகள் என்னென்ன ?

அவர் ஓய்வு நாள் சட்டத்தை பற்றி நன்றாக தெரிந்தும், வேண்டுமென்றே தன் சுய விருப்பத்துடன் ஓய்வு நாளை மீறியதால், தெரிந்தே சட்டத்தை மீறியதாக அவர் கரேட்டிற்கு* உரியவராக கருத படுவார் ; (யூத இனத்திலிருந்தும், ஆன்மீக நன்மைகளைளிலிருந்தும் தள்ளிவைக்கப்படுதல்)

ஓய்வு நாளை அவர் மீறுவது கண்டு அவரை எச்சரித்த சக மக்கள் யாரவது சாட்சிகளாக இருந்தால், அந்த சாட்சிகளின் அடிப்படையில் யூத திருக்கோயிலான பெய்த் ஹமிக்தாஷின்

முன் விசாரிக்கப்பட்டு கல்லெறிந்து அவர் கொல்லப்பட வேண்டும்!!.

ஒருவேளை ஓய்வுநாளில் ஒருவர் அவரையும் உணராமல் மறுக்கப்பட்ட வேலைகளை செய்தால், அதற்க்குத்தக்க பாவநிவாரண பலிகளை அவர் கொண்டு வருவாராக!!

2.Whenever the expression, "one who performs this is liable" is used within the context of the Sabbath laws, the intent is that he is liable for *karet*, and if witnesses are present and administer a warning, he is liable to be stoned to death. If he performs such an activity without being aware of the transgression, he is liable for a sin offering.

2. சப்பாத் சட்டங்களை பொறுத்த மட்டில் "இதைச் அவர் செய்தால் இதற்கான முழு பொறுப்பையும் இவர் தான் ஏற்க வேண்டும்" என்று கூறும்போதெல்லாம் அவர் கரேட்டுக்கு (ஆக்கினைக்கு) பொறுப்பானவர் என்பதும், அவர் விதிமீறியதற்கு அருகிலிருந்த சாட்சிகளும் அவருக்கு எச்சரிக்கையும் செய்திருந்தும் அவர் அவர்களை அசட்டை செய்து செவி கொடுக்காமல் போயிருந்தால், அவர் நிச்சயமாக கல்லெறியப்பட வேண்டும் என்பது சட்டமாகும் . ஆனால் அவர் அந்த பின்விளைவுகளைப் பற்றியோ அதனால் தனக்கு மரண தண்டனை வருமென்றோ அறியாதவராய் அவர் சப்பாத் விதிமீறல்களை செய்திருந்தால், அவர் பாவநிவாரண பலி மட்டுமே தர கடமைப்பட்டுள்ளார்.

3.Whenever the expression, "one who performs this is not liable" is used, the intent is that he is not liable for *karet*, for [execution by] stoning, or for bringing a [sin] offering. It is, however, forbidden to perform this act on the Sabbath

In such an instance, the prohibition is Rabbinic in origin and was instituted as a safeguard against [the performance of] labour. A person who performs such an act is given "stripes for defiance." Similarly, whenever the expressions "this should not be performed..." or "it is forbidden to do this on the Sabbath" are used, a person

who performs such an act as a conscious act of rebellion is given "stripes for defiance."

3 மரண ஆக்கினையிற்கு (காரெத்) ஏதுவான செயல்களல்லாமல் பொதுவாக ஓய்வு நாளில் இவைகளை செய்யாதே என்று தோராவில் கூறிய செயல்களை ஒருவர் வேண்டுமென்றே செய்தால் யூத இரபைகளின் சட்டத்தின் படி மார்க்கத்தை அந்த நபர் நெறியாக பின்பற்ற வேண்டி அவருக்கு கசை அடிகள் கொடுக்க பட வேண்டும்.

இது "இவைகளை செய்யாதே" என்று எழுதி இருந்தாலோ "ஓய்வுநாளில் இந்த செயல்கள் தடை செய்யப்பட்டவை" என்று இருந்தாலோ , அதில் மரண தண்டனை (காரெத்) குறிப்பிடாமல் இருந்தாலோ, வெறும் "ஓய்வு நாளில் இவைகளை செய்யாதே" என்று மட்டும் கூறி இருக்கும் சட்டங்களை ஒருவர் மீறினால் அவர் "நெறி படுத்தும் கசையடி" தண்டனைக்கு பொறுப்பாவார்

4. Whenever the expression, "it is permissible to do this" is used, the intent is that, at the outset, one may perform this act. Similarly, whenever the expressions, "one is under no obligation" or "one is not liable at all" are used, one does not receive any punishment at all [for performing such an act.]

4. இதுவே ஒருவர் "ஓய்வுநாளில் இவைகளை செய்யலாம்" என்றோ இதை "ஓய்வுநாளில் இவைகளை செய்ய தடை ஒன்றும் இல்லை" என்று இருப்பதை அவர் முறையாக கடைபிடித்திருந்தாரென்றால் அவருக்கு எந்த வகை தண்டனையும் தரப்பட மாட்டாது

5. It is permissible to perform an act that is permitted on the Sabbath, despite the fact that it is possible - but it is not an absolute certainty - that, [as a result of one's actions], a forbidden labor will be performed, provided one does not have the intent to perform that labor

What is implied? A person may drag a bed, a chair, a bench and the like [on the ground] on the Sabbath, provided he does not intend to gouge out a groove in the earth

while dragging them. Therefore, even if he did gouge out [a groove] in the ground [while dragging them], it is of no consequence, for he did not have this intent in mind.

Similarly, a person may tread on grass on the Sabbath, as long as his intent is not to uproot it. Thus, should it be uprooted, that is of no consequence. Also, a person may rub powdered herbs and the like over his hands, provided he does not intend to remove his hair. Therefore, if the hair is removed, it is of no consequence. Based on the same rationale, one may enter a narrow opening on the Sabbath even though, [while doing so,] one causes pieces of the wall to fall. Similarly, it is permissible to perform any act with similar repercussions, provided that one does not have the intent of doing so.

5. ஓய்வுநாளில் அனுமதிக்கப்பட்ட செயல்களை ஒருவர் செய்வதற்கு என்றுமே மார்க்கத்தில் முழு அனுமதி உண்டு, ஆனால் அந்த செயல்களை அவர் செய்வதின் மூலம் "ஓய்வுநாளில் அனுமதியற்ற செயல்களை" பின் விளைவுகளாக அவரையும் அறியாமல் அவர் செய்ய நேரிடலாம்

மேலும் உதாரணங்களுடன் விளக்கமாக கூற வேண்டுமென்றால் ஒருவர் தன் மண் தரை வீட்டிலோ முற்றத்திலே ஓய்வுநாள் அன்று தன் படுக்கையையோ நாற்காலிகளையோ மேசைகளையோ தான் ஓய்வெடுப்பதற்காக வேண்டி நகர்த்த முற்படும்போது தன்னையும் அறியாமல் அந்த மண் தரையில் ஒரு குழியையோ பள்ளத்தையோ ஏற்படுத்தலாம்.
ஓய்வு நாளில் நிலத்தில் குழி தோண்டுவதற்கு தடை இருந்தும்

அந்த விதி முறை இவர் மீது விழாது காரணம் இவரிடம் ஓய்வு நாளில் நிலத்தில் குழி தோண்ட வேண்டும் என்று எண்ணம் இல்லை, இந்த நிகழ்வு இவரையும் அறியாமல் நிகழ்ந்தது.

அதே போல ஓய்வுநாளில் எந்த தாவரங்களையும் புடுங்கி போடாதே என்று கட்டளை உள்ளது. ஒருவர் ஓய்வு நாளில் நடக்கும்பொழுது தன கால் பட்டு, புற்கள் அறுப்புண்டோ நிலத்திலிருந்து பிடுங்கப்பட்டு கீழே விழ நேரிட்டால் அவர் மீது எந்த தவறும் இல்லை கரணம் அவர் அதை வேண்டுமென்றே செய்ய வில்லை

மேலும் ஒருவர் ஓய்வு நாள் அன்று தன் கைகளுக்கு மணக்கும் தைலத்தையோ ஜவ்வாது பொடியையோ தடவும் போது அவரின் சில கை முடிகள் உதிர்ந்தால் அது ஓய்வுநாளன்று சவரம் செய்ததற்கு ஒப்பாகாது . அவர் மீது எந்த தவறும் இல்லை

இதே அடிப்படையில் ஒருவர் ஓய்வு நாளன்று ஒரு குறுகிய தெருவில் நடந்தார் என்றால் அப்பொழுது அவரையும் அறியாமல் அவர் உடல் அந்த குறுகிய சந்திலுள்ள எதோ ஒரு சுவற்றில் உராயும் பொழுது அந்த சுவவற்றின் சில சுண்ணாம்பு துகள்களோ மண் துகள்களோ கீழே விழுந்தால் உடனே அவர் ஓய்வு நாளில் சுவற்றை செப்பனிடும் பணிகளை செய்தார் என்று கூறகூடாது

எனவே ஒருவர் ஓய்வு நாளன்று அனுமதிக்கப்பட்ட செயல்களை செய்யும்போது தன்னையும் அறியாமல் ஓய்வுநாளில் தடை செய்யப்பட்ட சில பணிகள் பின் விளைவுகளாக நடந்தால் அதற்கு அவர் பொறுப்பல்ல .

இது போன்ற 'பின் விளைவு செயல்கள்' ஒரு பொருட்டே இல்லை,

காரணம் அவர் நோக்கம் அதுவன்று, அவைகள் தன்னையும் அறியாமல் நிகழ்ந்தது

6 [In contrast,] when one performs a deed that results in the performance of a forbidden labor, and it is a certainty that this deed will cause [that labor] to be performed, one is liable even though one did not intend [to perform the forbidden labor]

What is implied? A person needs a fowl's head to serve as a toy for a child, and therefore cuts off the [fowl's] head on the Sabbath; although his ultimate purpose is not merely to slaughter the chicken, he is liable. It is obvious that it is impossible for the head of a living being to be cut off and for that being to survive. Instead, the [fowl's] death came about because of [this activity]. [Therefore, he is liable.] The same applies in other similar situations

6. ஆனால் இதுவே ஒருவர் ஓய்வு நாளில் 'அனுமதிக்கப்பட்ட செயல்களில்' ஒன்றை செய்வதின் மூலம் ஓய்வு நாளில் 'தடை செய்யப்பட்ட' செயல்களை செய்ய நேரிடலாம் என்று அவருக்கு நன்றாகவே தெரிந்தால் அந்த செயலை அவர் செய்யக்கூடாது மீறி செய்தால் அவருக்கு தண்டனை உண்டு.
ஆனால் இதுவே ஒருவர் ஓய்வு நாளில் 'அனுமதிக்கப்பட்ட செயல்களில்' ஒன்றை செய்வதின் மூலம் ஓய்வு நாளில் 'தடை செய்யப்பட்ட' செயல்களை செய்ய நேரிடலாம் என்று அவருக்கு நன்றாகவே தெரிந்தால் அந்த செயலை அவர் செய்யக்கூடாது,

மீறி செய்தால் அவருக்கு தண்டனை உண்டு

இதை மேலும் விளக்க ஒரு உதாரணத்தை காண்போம் . ஒருவரின் குழந்தை தான் விளையாட தனக்கு ஒரு குருவியின் தலையால் செய்த ஒரு பொம்மை வேண்டும் என்று கேட்கிறான் என்று வைத்துக்கொள்வோம். தன் குழந்தையிற்காக ஒரு விளையாட்டு பொம்மையை ஓய்வு நாளன்று அன்பளிப்பாக பெற்றோர் தருவது தவறில்லை ஆனால் அதே ஓய்வு நாளன்று வேட்டையாடி, ஒரு குருவியை கொன்று அதன் தலையை வைத்து ஒரு பொம்மை செய்தால் அது ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயல் ஆகும். அந்த செயலை அவர் செய்யக்கூடாது, மீறி செய்தால் அவருக்கு தண்டனை உண்டு. இது போலுள்ள சூழ்நிலைகளில் இந்த உதாரணமே சிறந்த வழிகாட்டி

7.Anyone who performs a [forbidden] labor - even if he has no need for the actual labor he performed - is liable for his deed.

What is implied? A person extinguished a lamp because he needed [to save] the oil or the wick from being destroyed or from burning or so that the earthenware reservoir of the lamp [that holds the oil] would not break. Since he had the intent of extinguishing the lamp, even though he did not do so for the [usual] purpose of extinguishing, but merely for the sake of the oil, the wick or the earthenware, he is liable.

Similarly, a person who moves a thorn four cubits in the public domain or extinguishes a coal so that many people will not be injured by it, is liable. Although the [usual]

purpose [served] by extinguishing [the coal] or moving [the thorn] is not important to him, and his intent was merely to prevent injury, he is liable. The same applies in other similar situations.

7.ஒருவர் ஓய்வு நாளில் விளக்கை அணைத்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம் அவர் விளக்கை அணைத்ததற்கான காரணம் திரி எரிந்துவிடாமல் இருக்கலாம் அல்லது எண்ணெயை மிச்சப்படுத்த கூட இருக்கலாம் இருந்தாலும் அவர் ஓய்வு நாள் அன்று விளக்கை அணைப்பாயாக என்ற கட்டளையை மீறி விட்டார்.

அவரின் நோக்கம் ஓய்வு நாளில் விளக்கை அணைக்க வேண்டும் என்பது அல்ல இருந்தாலும் அவர் செய்த செயலின் மூலம் ஓய்வு நாளில் தனக்கு விதிக்கப்பட்ட சட்டத்தை மீறுகிறார் என்று அறிந்தும் அவர் அதை செய்ய முற்பட்டதால் அவர் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்.

இதே போல ஒருவர் நடைபாதையில் உள்ள முள்ளை நான்கு முலத்திற்கு மேலாக அகற்றினாலோ அல்லது எரிந்து கொண்டிருக்கும் தணல் நெருப்பாக மற்ற இடங்களில் பற்றிகொள்ளும் என்றோ கருதி அந்த தணலை அணைப்பதன் மூலமாகவோ ஓய்வு நாளின் சட்டத்தை மீறுகிறார் என்றால் அவர் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார். இது போலுள்ள சூழ்நிலைகளில் இந்த உதாரணமே சிறந்த வழிகாட்டி

8.Whenever a person intends to perform a forbidden labor, but instead [through his actions] causes the performance of another forbidden labor for which he had no intent, he is not liable, because his intent was not carried out.

What is implied? A person threw a stone or shot an arrow at a colleague or at an animal with the intent of slaying them. Should [the object that he propelled] uproot a tree in its progress and not kill [the intended victim], he is free of liability.

How much more so does this principle apply if one had the intent of performing a lesser transgression and one performed a more serious one. For example, a person intended to throw [a stone] into a *carmelit,* and instead, the stone passed into the public domain. He is not held liable. The same applies in other similar circumstances.

Should a person have the intent of performing a permitted act and instead perform another act [which is forbidden], he is not held liable. For example, should he intend to cut produce that was not attached to the ground, and instead cut produce attached to the ground he is not held liable. The same applies in other similar situations.

8. ஒருவர் எப்பொழுதெல்லாம் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலை செய்ய நினைத்து அந்த செயலை செய்ய முற்படும்பொழுது அவர் நினைக்காத வேறு செயல் நிகழ்ந்து விட்டால் அந்த செயல் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலாக இருந்தும் அவருக்கு எந்த தண்டனையும் விதிக்கப்பட மாட்டாது. காரணம் அவர் நினைத்தது நடக்கவில்லை
இதை உதாரணங்களோடு விளக்க வேண்டும் என்றால் ஒருவர் தன் சக நபர், ஒரு மீதோ விலங்கின் மீதோ அவர்களை கொல்லும்

எண்ணத்தில் ஒரு கல்லையோ ஒரு அம்பையோ அவர்கள் மீது எய்யும்பொழுது அந்தக் கல்லோ அந்த அம்போ ஒரு செடியில் பட்டு அதனால் அந்தச் செடி வேரோடு கீழே விழும் என்றால் அவருக்கு ஓய்வு நாளை மீறிய தண்டனை விதிக்கப்பட மாட்டாது. இதே பார்வை தான் ஒருவர் சிறிய தவறை செய்ய முற்படும் பொழுது அது பெரிய தவறாக எதேர்சையாக மாறினால் அவர் மீது சிறிய தண்டனைக்காண குற்றம் மட்டுமே சுமத்தப்பட வேண்டும் காரணம் அவர் பெரிய தவறை செய்ய வேண்டும் என்று தன் மனதில் எண்ணவில்லை. இன்னும் இதை ஆழமாக ஒரு எடுத்துக்காட்டுடன் பார்ப்போம். ஒருவர் இரபைகள் விதித்த சட்டத்தை மட்டுமே முறிக்க ஒரு கல்லை எரிவார் என்றால் அந்தக் கல் தவறுதலாக பொது இடத்தில் விழும் என்றால் அவர் ஓய்வு நாளின் பெரிய சட்டத்தை முறித்தார் என்று கருதக்கூடாது இதுபோல் உள்ள சூழ்நிலைகளில் இந்த உதாரணமே சிறந்த வழிகாட்டி

திரும்பவும் நினைவில் கொள்வோம் ஒருவர் ஓய்வு நாளில் அனுமதிக்கப்பட்ட செயலை செய்ய முற்படும்பொழுது அவரே அறியாமல் ஓய்வு நாளில் அனுமதி மறுக்கப்பட்ட செயலுக்கு அது எதேர்சையாக வழி வகுக்கும் பொழுது அவர் மீது எந்த தண்டனையும் சுமத்தப்பட மாட்டாது. இதற்கு உதாரணமாக ஒருவர் பூமிக்கு அடியில் விளைந்த கிழங்கை அறுக்க எண்ணாமல் பூமிக்கு மேலே உள்ள கனியை மட்டும் பறிக்க முற்படும்பொழுது வேரில் இருக்கும் கிழங்கும் அந்த விசையினால்

பிடுங்கப்படுமானால் அவருக்கு எந்த தண்டனையும் விதிக்கப்பட மாட்டாது. இது போல் உள்ள சூழ்நிலைகளில் இந்த உதாரணமே சிறந்த வழிகாட்டி

9. One who intended to pluck black figs but plucked [green] figs, or intended to first pluck figs and then grapes but the matter was switched and he plucked grapes first and then figs, is exempt. Even though he plucked all that he thought, since he did not pluck [them] in the order that he thought, he is exempt – as he did it without intention. For the Torah only prohibits thought out work (*melakhet machshevet*).

9.ஒருவர் ஓய்வு நாளன்று கருப்பு நிற அத்திப்பழங்களை பறிக்க நினைத்து வயலுக்குச் செல்கிறார் ஆனால் அங்கு அவர் பச்சை நிற அத்திப்பழங்களை முதலில் பறிக்கிறார், இல்லையென்றால் அத்திப்பழத்திற்கு பதிலாக திராட்சைப் பழங்களை பறிக்கிறார். பின்பு அத்திப்பழங்களை பறிக்கிறார். அவர் சிந்தனையில் என்னவோ முதலில் அத்திப்பழத்தை தான் பறிக்க வேண்டும் என்று இருந்தது. பின்பு அவர் பறிக்கும் பொழுதோ திராட்சை பழங்களை முதலில் பறிக்கிறார்.

அவர் தன் சிந்தனையில் எதெல்லாம் பறிக்க வேண்டும் என்று நினைத்தாரோ அதெல்லாம் அவர் பறித்திருந்தாலும் கூட அவர் எண்ணிய வண்ணம் எண்ணிய முறையில் வரிசையாக அவைகளை பறிக்கவில்லை.

. எனவே அவர் மீது எந்த தண்டனையும் சுமத்தப்பட மாட்டாது காரணம் தோராவின்படி ஓய்வு நாளில் எதை முறையாக செய்ய

வேண்டும் என்று நினைக்கிறோமோ அதை செய்யக்கூடாது என்று தான் தடைவிதிக்கிறது.

10.When a person had two candles before him and both of them were either burning or extinguished, and he desired to kindle or extinguish one, but instead he kindled or extinguished the other, he is liable, for he performed the [forbidden] labor that he intended to perform.

To what can the matter be compared? To a person who intended to pick one fig and picked another instead, or to a person who desired to kill one [living being] and killed another instead. [He is liable,] because the [forbidden] labor which he intended to do was performed.

10. ஒருவர் முன்பு இரண்டு மெழுகுவர்த்திகள் இருக்கின்றன அவை இரண்டுமே அணைந்தவைகளாக இருக்கலாம் அல்லது எரிந்து கொண்டிருப்பவையாக இருக்கலாம். ஒருவேளை அவர் அதில் ஒரு மெழுகுவர்த்தியை மட்டும் அணைக்கவோ பற்ற வைக்கவோ நினைத்து அதில் உள்ள வேறு மெழுகுவர்த்தியை பற்ற வைத்தாலோ அணைத்தாலோ அவர் ஓய்வு நாளை மீறிய தண்டனைக்குரியவர்
காரணம் ஓய்வு நாளில் எதை செய்யக்கூடாது என்று இருக்கிறதோ அதை அவர் செய்தார்
இதை எதுவரை ஒப்பீடு செய்யலாம் என்றால் ஒருவர் ஒரு அத்திப்பழத்தை பறிக்க நினைத்து அதே போலுள்ள வேறு ஒரு அத்திப்பழத்தை பறித்தால் அவர் தண்டனைக்குரியவர் அதேபோல

ஒருவர் ஒரு மனிதரை கொல்ல நினைத்து வேறொரு மனிதரை கொன்றால் அவர் தண்டனைக்குரியவர் காரணம் அவர் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலை அங்கு செய்தார் என்பதே ஆகும்

11. One is, however, freed of liability [in the following instance: There were two candles before a person, one lit and one extinguished.] The person intended to kindle the [one that was extinguished] first and to extinguish the second candle afterwards. Nevertheless, the order [of his actions] became reversed, and instead, he extinguished the candle first and kindled the second candle afterwards.
If he extinguished one and kindled the other in a single breath, he is liable. Although he did not kindle the first candle before [extinguishing the other], he did not delay [its lighting], and performed both activities simultaneously. Therefore, he is liable. The same applies in other similar circumstances.

Whenever a person performs a [forbidden] labor casually, without specific intention, he is not liable.

11.ஒருவரிடம் இரண்டு மெழுகுவர்த்திகள் உள்ளது. அதில் ஒன்று எரிந்து கொண்டிருக்கின்றது மற்றொன்று அணைந்து விட்டது அவர் எரிந்து கொண்டிருக்கின்ற மெழுகுவர்த்தியை அணைக்க வேண்டும் என்று நினைக்கின்றார் அதேபோல அணைந்த மெழுகுவர்த்தியை பற்ற வைக்க வேண்டும் என்று நினைக்கின்றார் இந்த இரண்டு காரியங்களையும் அவர் ஓய்வு நாளில் செய்ய

வேண்டும் என்று நினைக்கின்றார் ஆனால் அவர் அந்த செயலை செய்யும் பொழுது அணைந்த மெழுகுவர்த்தியை முதலில் பற்ற வைத்து பிறகு எரிந்து கொண்டிருக்கின்ற மெழுகுவர்த்தியை அணைக்கின்றார் என்று வைத்துக்கொள்வோம் அப்பொழுது அவர் மீது ஒய்வு நாளை மீறிய எந்த தண்டனையும் விதிக்கப்பட மாட்டாது

காரணம் அவர் தான் செய்ய நினைத்த ஓய்வு நாளில் தடைபட்ட செயலின் வரிசையை மாற்றி விட்டார்

அதே வேளையில் இவர் இந்த செயலை ஒரே மூச்சில் வரிசை மாறியோ அல்லது நினைத்த வரிசையிலே ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட அந்த இரு இரண்டு செயல்களையும் செய்தார் என்றாலோ அவர் ஓய்வு நாளை மீறிய குற்றவாளியாக கருதப்படுவார்

காரணம் ஒரே மூச்சில் பெரியதளவில் இடைவெளி ஏதுமில்லாமல் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட அந்த இரு செயல்களையும் அவர் புரிந்ததால் ஓய்வு நாளை மீறிய தண்டனைக்கு உரியவராக கருதப்படுவார்

இதே போல் உள்ள சூழ்நிலைகளில் இந்த உதாரணமே சிறந்த வழிகாட்டியாக இருப்பதாக

நினைவில் கொள்வோம், ஒருவர் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலை எந்த நோக்கமும் இல்லாமல் எதேர்ச்சையாக செய்தார் என்றால் அவர் ஓய்வு நாளை மீறிய தண்டனைக்கு உரியவராக கருதப்பட மாட்டார்

12.Whenever a person intended to perform a forbidden labor and performed it more effectively than he had originally intended, he is liable. If [he performs it] less effectively than he had originally intended, he is not liable.

What is implied? A person intended to carry a burden suspended behind him and instead, it swung in front of him. He is liable, for he intended to protect it in a less effective manner, and it was ultimately protected in a more effective manner. If, however, he intended to carry a burden suspended before him, and instead it swung behind him, he is not liable, for he intended to protect it in a more effective manner and, it was ultimately protected in a less effective manner

12.எப்பொழுதெல்லாம் ஒருவர் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலை தான் நினைத்ததை காட்டிலும் அந்த செயலை மிகத் திறனாக செய்து முடித்தார் என்றால் அவர் குற்றவாளியாக கருதப்படுவார், ஆனால் அதுவே அவர், தான் நினைத்த வண்ணம் சிறப்பாக அல்லாமல் மிக தரம் குறைந்த தனமாக அந்த செயலை செய்து முடித்தார் என்றால் அவர் ஓய்வு நாளை மீறிய குற்றவாளியாக கருதப்பட மாட்டார்

இதை உதாரணங்களோடு மேலும் விளக்க வேண்டும் என்றால் ஒருவர் சில சாமான்கள் கொண்ட சரக்கு பையை ஏனோ தானோ என்று அஜாக்கிரதையாக தன் முதுகின் மீது சுமந்து கொண்டு செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம் அந்தச் சுமை அவரையும் அறியாமல் அவர் முன்பு பாதுகாப்பாக தொங்குகிறது என்று வைத்துக் கொள்வோம் அப்பொழுது அவர் ஓய்வு நாளை மீறிய குற்றவாளியாக கருதப்படுவார் காரணம் அவர் அந்த

சுமையை தான் நினைத்ததை காட்டிலும் மிக திறனாக பத்திரமாக அதை சுமந்து செல்கிறார் என்று பொருள். ஆக, ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலை தான் சிந்தித்ததை காட்டிலும் மிகத் திறமையாக செய்து ஓய்வு நாளை மீறிய குற்றவாளியாக அவர் கருதப்படுவார்

ஆனால் அதுவே அவர் அந்த சுமையை மிக ஜாக்கிரதையாக கொண்டு செல்ல வேண்டும் என்று நினைத்து அதை சுமந்து செல்லும்போது அந்த சுமை அவரையும் அறியாமல் அவரின் முதுகின் மீது பின்பக்கமாக சாய்ந்தது என்று வைத்துக் கொள்வோம் . அப்படி சாய்வதால் அந்த சுமை மிக சேதத்துக்குள்ளாகிறது என்று வைத்துக் கொள்வோம், அவர் ஓய்வு நாளில் தடையை மீறியதற்காக குற்றவாளியாக கருதப்படமாட்டார் காரணம் அவர் ஓய்வு நாளில் தடைப்பட்ட செயலை மிக நேர்த்தியாக செய்ய வேண்டுமென்று நினைத்திருந்தாலும் தான் சிந்தித்ததை காட்டிலும் அந்த செயலின் செயல்திறன் மிகக் தரக்குறைவாகவே நடந்தேறியது, எனவே அவர் ஓய்வு நாளின் தடையை மீறிய குற்றவாளியாக கருதப்பட மாட்டார்

13. [A person who transfers an article from one domain to another is held liable in the following situation]: He was wearing a belt and he placed a burden that is commonly transferred in this manner between his body and his garment. Whether the burden hung in front of him or it had shifted behind him [at the time he transferred it], he is held liable, since it is likely to shift position.

13. ஒருவர் ஒரு பொருளை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றும்பொழுது கீழே விளக்கப்பட்டுள்ள விதமாக ஓய்வு நாளை மீறியதற்கான குற்றவாளியாக கருதப்படுவார்

அவர் பொதுவாக ஒரு பொருளை தன் உடலில் சுமக்க ஒரு இடுப்பு கச்சையை பயன்படுத்துகிறார் என்று வைத்துக் கொள்வோம். ஓய்வு நாளன்று ஒரு பொருளை அந்தக் கச்சையில் கட்டுகிறார் என்றால் அவர் குற்றவாளியாக கருதப்படுவார். இதில் அந்தப் பொருள் அவர் முன்பாக தொங்கினாலும் இல்லை அவருக்கு பின்புறமாக தொங்கினாலும் அது ஓய்வு நாளை மீறியதற்கான குற்றமாகத்தான் கருதப்படும். ஏனென்றால் அவர் அந்தக் கச்சையை கட்டுவதற்கு காரணமே ஒரு எடையை சுமக்கத்தான்

14.Whenever a person desired to perform a [forbidden] labor on the Sabbath, began the performance of that labor, and performed an amount of work sufficient to incur liability, he is held liable, even if he did not complete the task he desired to perform.

For example, a person desired to write a note or a contract on the Sabbath. We do not say that he is not liable until he completes his desire and writes the entire note or contract. Instead, as soon as he writes two letters, he is liable.

Similarly, a person who desires to weave an entire garment is held liable after weaving two strands. Although he intended to complete [the entire garment], he is held liable because he intentionally performed the amount of work sufficient to incur liability. The same applies in all similar situations.

14.எப்பொழுதெல்லாம் ஒருவர் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட பணிகளை செய்ய ஆசைப்பட்டு அதைத் தொடங்கி பிறகு அந்தப் பணியை முழுமையாக செய்து முடிக்காமல் பாதியில் விட்டு விட்டாலும் அவர் குற்றவாளியாக கருதப்படுவார் காரணம் அவர் செய்த பணியே ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட பணியாகும்

ஒரு எடுத்துக்காட்டாக ஒருவர் ஓய்வு நாளன்று ஒரு ஒப்பந்தத்தை எழுத நினைத்து பிறகு அதை பாதியில் விட்டு விட்டார் என்றார் என வைத்துகொள்வோம். அவர் அந்த ஒப்பந்தத்தை முழுவதுமாத எழுத நினைத்திருந்தாலும் அதை முடிக்கவில்லை எனவே அவர் குற்றவாளியாக கருதப்படுமாட்டார் என்று நாம் கூற இயலாது காரணம் அவர் இரண்டே இரண்டு எழுத்து எழுதியிருந்தாலும் அவர் குற்றவாளியாக கருதப்படுவார்

அதேபோல ஒருவர் ஒரு முழு ஆடையை நெய்ய நினைத்து இரண்டே இரண்டு நூல் கற்றோடு நிறுத்திவிட்டார் என்றாலும் அவர் குற்றவாளியாக கருதப்படுவார் அவர் ஒரு வேலை அவர் நினைத்த காரியத்தை முடித்திராவிட்டாலும் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட காரியத்தை அவர் தொடங்கிய குற்றத்திற்காகவே அவர் குற்றவாளியாக கருதப்படுவார் . இதுபோல் உள்ள சூழ்நிலைகளில் இந்த உதாரணமே ஒரு சிறந்த வழிகாட்டியாக இருப்பதாக

15.Whenever two people share in the performance of a [forbidden] labor that one of them could have performed by himself, they are [both] free of liability.

This applies whether one performed part of the [forbidden] labor and the other performed the remainder - e.g., one removed an article from one domain and the other placed it down in the other domain - or they both performed the [forbidden] labor together from the beginning to the end. For example, they both held a pen and wrote, or they both held a loaf of bread and transferred it from one domain to another.

15. ஓய்வு நாளன்று ஒரு தனி நபர் செய்யக்கூடிய தடை செய்யப்பட்ட பணிகளை இருவர் சேர்ந்து செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம் அதில் இருவருமே ஓய்வு நாளை மீறிய குற்றவாளிகளாக கருதப்பட மாட்டார்கள் ஒருவர் ஒரு பாதியை தொடங்கி மற்றொருவர் மீதி பாதியை முடித்தார் என்றால் அவர்கள் இருவருமே ஓய்வு நாளை மீறியதற்கு குற்றவாளிகளாக கருதப்பட மாட்டார்கள் எடுத்துக்காட்டாக ஒருவர் ஒரு பொருளை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுகிறார் மற்றொருவர் அந்தப் பொருளை அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுகிறார் என்றால் இதில் இருவருமே முதலிலுருந்து கூட்டாக இந்த வேலையை செய்தார்கள் என்றால் அவர்கள் ஓய்வு நாளை மீறியதற்கு குற்றவாளிகளாக கருதப்பட மாட்டார்கள் அல்லது இருவருமே சேர்ந்து ஒரு எழுதுகோலை பிடித்து எழுதினார்கள் என்றாலோ அல்லது இருவருக்குமே சேர்ந்து ஒரு ரொட்டியை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுகிறார்கள் என்றாலோ அவர்கள் ஓய்வு நாளை மீறியதற்கு குற்றவாளிகளாக கருதப்பட மாட்டார்கள்

16.When, however, a single individual cannot perform [the forbidden labor] alone and must be joined by others, [all the individuals involved are held liable]. For example, two people held a beam and transferred it to the public domain. Since neither one of them had the strength to perform this task alone, and they performed it together from the beginning to the end, they are both held liable. The minimum amount of work for which they are held liable is the same as for a single individual who performs such a task.

[The following decision applies when] one of them has sufficient strength to transfer the beam alone, but the other is unable to transfer it alone. If they join together and transfer the beam, the one who is capable [of moving it himself] is held liable. The second one is considered [merely] as offering assistance, and a person who offers assistance [in this fashion] is not liable at all. The same applies in other similar situations.

16. ஒருவேளை ஒரு தனி நபரால் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட ஒரு வேலையை செய்ய முடியாது எனில் அவர் உதவிக்காக இன்னொருவரையோ அல்லது பலரையோ கூட்டாக சேர்த்துதான் அந்த வேலையை செய்து முடிக்க முடியும் என்றால், உதாரணமாக ஒரு கனமான தூணை ஒரு இடத்தில் இருந்து பொதுவான இன்னொரு இடத்திற்கு மாற்றும் பொழுது அந்த தூணை ஒருவரால் தூக்க முடியாதபோது இன்னொருவரையோ அல்லது வேறு சிலரையோ உதவிக்கு அழைத்தாரென்றால் அவர்கள் அனைவரும் சேர்ந்து இந்த தூணை தூக்கி நகரத்தினார்கள் என்றால் அவர்கள் அனைவருமே ஓய்வு நாளை

மீறியதற்கு குற்றவாளிகளாக கருதப்படுவர்
இதில் அனைவருமே ஓய்வு நாளை மீறிய தனி நபர்களாக கருதப்பட்டு முழு குற்றவாளிகளாக இருப்பார்கள்
ஒரு வேலை அந்த தூணை இருவர் தூக்கும் பொழுது அதில் ஒருவர் மிகுந்த பலசாலியாக இருந்து மற்றொருவர் அந்த தூணை நகர்த்த கூட வலு இல்லாதவராக இருந்தார் என்றால் யார் பலசாலியோ அவர் ஓய்வு நாளை மீறிய குற்றவாளியாக கருதப்படுவார். காரணம் அந்த வலுவற்றவர் உதவி மட்டுமே புரிந்தார் எனவே அவர் ஓய்வு நாளை மீறியதற்கான குற்றவாளியாக கருதப்படமாட்டார். இதுபோலுள்ள சூழ்நிலைகளில் இந்த உதாரணமே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பதாக

17.Whenever [a forbidden labor is performed] in a destructive manner, one is not held liable. What is implied? A person who injures a colleague or an animal with a destructive intent, one who rips or burns garments, or one who breaks utensils with a destructive intent is not held liable.
A person who dug a pit solely because he needed the earth inside it is considered as having performed a [forbidden] labor with a destructive intent, and is therefore free of liability. Although he performed a [forbidden] labor, he is not held liable because he had a destructive intent.

17. எப்போதெல்லாம் ஒருவர் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலை அழிவுக்காக மட்டுமே செய்கிறாரோ அப்போதெல்லாம்

அவர் ஓய்வு நாளை மீறிய குற்றவாளியாக கருதப்பட மாட்டார் எடுத்துக்காட்டாக ஒருவர் ஓய்வு நாளன்று தன் சக நண்பரையோ ஒரு விலங்கையோ அடித்து
காயப்படுத்தினார் என்றாலோ அல்லது ஒரு ஆடையை கிழித்து எரித்தார் என்றாலோ அல்லது பாத்திரங்களை வேண்டுமென்றே கீழே போட்டு உடைத்தார் என்றாலோ "அழித்து நாசம் செய்ய வேண்டும்" என்ற நோக்கம் மட்டுமே அவருக்கு மேலோங்கி இருப்பதால் அவர் ஓய்வு நாளை மீறியதற்கான குற்றவாளியாக கருதப்பட மாட்டார்.

ஒருவருக்கு நிலத்தின் அடியில் இருக்கும் மண் அவருக்கு தேவையாக இருப்பதால் அவர் நிலத்தில் ஒரு குழியைத் தோண்டி அந்த நிலத்தின் ஆழத்தில் இருக்கும் மண்ணை எடுத்தார் என்றால் அவர் ஓய்வு நாளை மீறிய குற்றவாளியாக கருதப்பட மாட்டார் காரணம் அவர் தடை செய்யப்பட்ட செயலை செய்திருந்தாலும் கூட அவர் பூமியை சேதப்படுத்தி குழியை தோண்ட வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. இதுபோலுள்ள சூழ்நிலைகளில் இந்த உதாரணமே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பதாக

18. Whenever a person carries out a destructive activity for the sake of ultimately performing a constructive activity, he is liable. For example, a person who demolishes [a structure] in order to build [another] in its place, one who erased for the sake of writing [something else] in the place of the erasure, or one who dug a pit in order to place the foundations of a structure within. The same applies in other similar

situations.
The minimum measure of the destructive activity for which he is held liable is equal to that of the correspondent positive activity.

18.எப்பொழுதெல்லாம் ஒருவர் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட ஒன்றை புதிதாக கட்டி எழுப்ப வேண்டும் என்பதற்காக மற்றொன்றை அழிக்கிறாரோ அப்பொழுதெல்லாம் அவர் ஓய்வு நாளை மீறியதற்கான குற்றவாளியாக கருதப்படுவார் .

எடுத்துக்காட்டாக ஒருவர் ஓய்வு நாளன்று ஒரு புதிய கட்டடத்தை கட்டுவதற்காக ஒரு பழைய கட்டடத்தை இடித்தாரென்றாலொ அல்லது ஏற்கனவே எழுதப்பட்ட ஒரு தாளில் புதிதாக ஒன்றை எழுத வேண்டுமென்பதற்காக எழுதப்பட்டவைகளை அழித்தாரென்றாலொ அல்லது அஸ்திபாரமிட வேண்டும் என்பதற்காக ஒருவர் குழியை தோண்டினாலோ அவர் ஓய்வு நாளை மீறியதற்கான குற்றவாளியாக கருதப்படுவார்.
இது போலுள்ள சூழ்நிலைகளில் இந்த உதாரணங்களை வழிகாட்டியாக கவனிப்பீர்களாக
அவர் எந்தளவுக்கு ஒரு காரியத்தை செய்து முடிக்க வேண்டுமென்று நினைத்து அதற்காக ஒரு அழிவை செய்தாரோ அந்த அளவிற்கு அவருக்கு ஓய்வு நாளை மீறியதற்கான குற்றவாளியாக கருதப்படுவார்

19.Whenever a person performs a [forbidden] labor on the Sabbath, partially with

intent and partially unintentionally, he is not liable. [This law applies] regardless of whether one began the performance of the [forbidden] labor intentionally and completed it unintentionally, or one began the [forbidden] labor unintentionally and completed it intentionally.

One is liable for *karet* only when one performs the entire minimum measure of a [forbidden] labor intentionally from the beginning to the end. [In such a circumstance,] were witnesses who administered a warning to be present, one would be liable for execution by stoning. Conversely, one is liable to bring a sin offering of a fixed nature when one performs the entire minimum measure of a [forbidden] labor unintentionally from the beginning to the end

19. எப்போதெல்லாம் ஒருவர் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலை பாதி மனதோடு ஆரம்பித்து, பாதி மனதோடு முடித்தாரென்றாலோ அல்லது தனக்கு ஈடுபாடே இல்லாமல் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலை தொடங்கி முடித்தாரரென்றாலோ அவர் ஓய்வு நாளின் தடையை மீறிய குற்றவாளியாக கருதப்பட மாட்டார்.

ஒருவர் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலை முழு மனதோடு தொடங்கி தண்டனை பெருமளவிற்கு செய்துவிட்டாரெனில் அப்பொழுதுதான் அவருக்கு காரெத் தண்டனை அளிக்கப்படும். அதுபோன்ற சூழ்நிலைகளில் அவரை எச்சரித்த சாட்சியாளர்கள் இருந்தார்களென்றால் அவர் நிச்சயம் கல்லறியப்படுவர் .

ஆனால் அதுவே அவர் ஓய்வு நாளில் தடை செய்யப்பட்ட செயலை அவரையும் அறியாமல் அந்த செயலின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை உணராமலிருந்தாரென்றால் குறைந்த அளவே அவர் அந்த செயலை செய்திருந்தாலும் அவர் பாவ நிவாரண பலி செலுத்த கடமைப்பட்டுள்ளார்

Chapter 2

1. The [laws of] the Sabbath are suspended in the face of a danger to life, as are [the obligations of] the other mitzvot. Therefore, we may perform - according to the directives of a professional physician of that locale - everything that is necessary for the benefit of a sick person whose life is in danger.

When there is a doubt whether or not the Sabbath laws must be violated on a person's behalf, one should violate the Sabbath laws on his behalf, for the Sabbath laws are suspended even when there is merely a question of danger to a person's life. [The same principles apply] when one physician says the Sabbath laws should be violated on a person's behalf and another physician states that this is not necessary.

2. [The following laws apply when physicians] determine on the Sabbath that a person needs [a treatment to be administered] for eight days. We do not say that we should

wait until the evening so that it will not be necessary to violate two Sabbaths on his behalf. Instead, the treatment is begun immediately, on the Sabbath, and even one hundred Sabbaths may be violated on his behalf.

As long as a person is dangerously [ill] - or even if there is a question whether or not he is dangerously [ill] - and requires treatment, [the Sabbath] should be violated [on his behalf]. A lamp may be lit on his behalf and extinguished on his behalf. [Animals] may be slaughtered on his behalf, [food] baked and cooked on his behalf, and water heated for him, whether to drink or to use for bathing.

The general principle for a person who is dangerously ill is that the Sabbath should be considered as a weekday regarding all his needs

3. When such treatment is administered, it should not be administered by gentiles, by children, by servants, or by women, so that they will not view the Sabbath flippantly. Instead, the treatment should be administered by the leaders of Israel and the wise.

It is forbidden to hesitate before transgressing the Sabbath [laws] on behalf of a person who is dangerously ill, as [reflected in the interpretation in the phrase of Leviticus 18:5,] "which a person shall perform to live through them," as "['to live through them'] and not to die through them."

This teaches that the judgments of the Torah do not [bring] vengeance to the world, but rather bring mercy, kindness, and peace to the world. Concerning those non-believers who say that [administering such treatment] constitutes a violation of the Sabbath and is forbidden, one may apply the verse [Ezekiel 20:25]: "[As punishment,] I gave them

harmful laws and judgments through which they cannot live."

3.